1992 ஏப்ரல் 24]

அப்பாலுள்ள சின்ன இளம்பாக்கம் கிராமத்தில் மாணவர்களுக்கு விடுதி கையகப்படுத்தப்பட்டுள்ளது. அங்கேயிருந்து மாணவர்கள் பள்ளிக்கு செல்வதற்கு கிட்டத்தட்ட 3 கிலோ மீட்டர் இருப்பதால் நகரப் பேருந்துகளில் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மதியம் விடுதிக்கு வந்து சாப்பிட்டு செல்வதற்கு அவர்களுக்கு கஷ்டமாக இருப்பதால், காலையிலேயே சமைத்து எடுத்துச் செல்வதற்கு பாத்திரங்கள் முதற்கொண்டு எதுவும் இல்லையென்று ஆதிதிராவிடர் நலத்துறை மாவட்ட அதிகாரி அவர்கள் சொல்கிறார். ஆகவே, பல்வேறு கஷ்டங்கள் மாணவர்களுக்கு இருப்பதால், அந்த விடுதி கட்டிடம் சீக்கிரம் கட்டுவதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து கட்டித் தருவதற்கு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அளித்து செயல்படுத்தப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்திரக்குடியில் கட்டிடம் கட்டுவதற்கு சர்வே நம்பர் 64/11/பி-போவாளூர் கிராமத்தில் 1-10-1991 தேதியிட்டு தாட்கோ அலுவலகத்திற்கு டி.ஓ. நம்பர் கே4/57600-ல் அனுப்பப்பட்டு, இன்னும் தாட்கோ அலுவலகத்தில் நடவடிக்கையெடுக்கப்படாமல் இருக்கிறது, ஆகவே, உடனடியாக நடவடிக்கையெடுப்பதற்கு அந்த தாட்கோ அலுவலகத்திற்கு அமைச்சர் அவர்கள் அறிவுரை கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண். 624. திரு. எஸ்.ஜி. வேணுகோபால். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

624—

ஆடு வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி.

*8870—திரு. என்.ஜி. வேணுகோபால்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) முதுநிலை பட்டமேற்படிப்பு பயில ஆடு வளர்ப்பு மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி (Post-Graduate course for Sheep Development and Research College) இராணிப்பேட்டை முகுந்தராயபுரத்தில் துவக்கப்பட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "European Economic Project" என்ற அமைப்பின்கீழ் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த முகுந்த ராயபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட உள்ள ஆட்டுப் பண்ணை ஒரு மிகப் பெரிய அளவிலே உருவாக உள்ளது. இதை நவீன முறையில் மேலும் மேம்பாடு செய்யவேண்டுமெனில், விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்ய கல்லூரி ஒன்று அமைத்தால் மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே இதை அரசு மீண்டும் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிக் கல்லூரியை நிறுவுவதற்கு 500 ஏக்கர் நிலமும், ரூ. 25 கோடி செலவும் தேவைப்படுகிறது. ஆகையினால் இவ்வாண்டு இதுபோன்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் அங்கே துவக்கப்பட இருக்கின்ற ஐரோப்பிய நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட இருக்கின்ற ஆடு வளர்ப்புப் பண்ணை மிகச் சீரிய முறையில் பயனுள்ள வகையிலே அது பயன்பட வேண்டுமென்று சொன்னால் இந்தக் கல்லூரியை அமைத்தால் மிகவும் சிறந்த வகையில், அங்கேயிருக்கின்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே இந்தக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா? மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : தமிழகத்தில் சேலம் மாவட்டத்தில், நாமக்கல்லிலும், சென்னையிலும் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மேலும் ஒரு கல்லூரி தேவையில்லை என அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 625. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்,